# கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் நிர்மாணிக்கப்பட்ட நூலகக் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 3,458,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 502,000 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 2,956,000 இனால் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வாகனமும் வண்டியின் கீழ் முன்கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா 4,785,810 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பேரேட்டின் பிரகாரம் முன் கொண்டுவரப்பட்ட பெறுமதி ரூபா

3,172,605 ஆனமையால் சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,613,205 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நாட்குறிப்பு இலக்கம் 04 இன் மூலம் நிலுவையாக இருந்த வாடகைப் பெறுவனவு ரூபா 7,295,727 தொகை வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் பொதுப் பேரேட்டில் ரூபா 1,205,727 ஆகக் குறிப்பிடப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 6,090,000 ஆகக் காணப்பட்டது.

(ஈ) பொதுக் களஞ்சியக் கணக்கில் ஆண்டின் போதான கொள்வனவுகளும் விநியோகித்தல்களும் பதியப்படாமல் முன்னைய ஆண்டின் ஆரம்பப் பெறுமதியில் இறுதிப் பெறுமதி சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மின்சாரக் களஞ்சியக் கணக்கில் ஆண்டின் போதான கொள்வனவுகளும் விநியோகித்தல்களும் பதியப்படாமல் ஆண்டின் ஆரம்பப் பெறுமதியில் ஆண்டின் இறுதிப் பெறுமதி சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இருப்பு விநியோகிக்கும் போது (FIFO) முதல் வந்தது சென்றது முறைமை பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) பரீட்சை மீதி தயாரிக்கும் போது ஆண்டின் சகல சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவின மீதி அனைத்தையும் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் ரூபா 13,315,407 தொகையான வருமானம் மற்றும் ரூபா 13,921,860 தொகையான செலவினம் என்பன பதியப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் 10 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,924,440 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,973,159 ஆனமையால் ரூபா 1,048,719 வேறுபாடு காணப்பட்டது.

(எ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்த கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 16,272 மற்றும் ரூபா 80,892,641 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 115,343,241 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 606,453 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 250,857 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 235 | 176 | 51 |
| (ii) | வாடகை | 1,296 | 1,206 | 90 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 372 | 201 | 171 |

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க

அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 3(1)(1) விதியின் பிரகாரம் உறுப்பினர்களுக்கு படிகள் செலுத்தும் போது வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பிக்காத அல்லது முறையான பிரகாரம் விடுமுறை பெற்றுக்கொள்ளப்படாது நடத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகமளிக்காத மூன்று உறுப்பினர்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது உறுப்பினர் படியாக ரூபா 81,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தென் மாகாண சபையின் பெருந்தெருக்கள் அமைச்சிற்குரிய எஸ்பீ எச்எப் - 2440 ஆம் இலக்க டபள் கப் வாகனம் 2012 மே 20 ஆந் திகதி தொடக்கம் தலைவரின் கடமைப் பிரயாணங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்த வாகனத்திற்காக சபை நிதியத்திலிருந்து 2012 மே 20 தொடக்கம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 434,903 பெறுமதியான 3735.2 லீற்றர் எரிபொருளும், பழுதுபார்த்தல் செலவினமாக ரூபா 71,606 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செலவினங்களுக்காக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் தலைவர் கிரிந்த புஹூல்வெல்ல கமநல சேவை செயற்குழுவின் கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தராக சேவையாற்றுவதுடன் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2008 சனவரி 10 ஆந் திகதிய 32/91(iii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபையின் செயற்பாடுகளுக்காக ஒரு மாதத்திற்கு 07 நாட்கள் விடுமுறை பெற்று எஞ்சிய நாட்களில் உத்தியோகத்தருக்குரிய பதவியில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு கமநல சேவை ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

தலைவர் கமநலசேவை செயற்குழுவிற்குச் சமர்ப்பித்த முன்கூட்டிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செய்த வேலை அறிக்கையின் பிரகாரம் செயற்குழுவின் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நாட்களில் சபையின் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டமை காண்பிக்கப்பட்டு பிழையாக ரூபா 22,000 தொகை இணைந்த படி பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 மார்ச் 26 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிரதேச சபையின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் போது கொள்வனவுக் குழு நியமிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 317,254

பெறுமதியான கொள்வனவுகளுக்காக எவ்வித கொள்வனவுக் குழு தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 7,215,382 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் சம்பளச் செலவினம் ரூபா 10,244,915 ஆனமையால் சபை நிதியத்திற்கு ரூபா 3,029,533 தொகையான மேலதிக செலவினப் பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2002 செப்தெம்பர் 16 ஆந் திகதிய பெறுமதி சேர் வரி சுற்றுநிருபத்தின் இலக்கம் 02 இன் 05 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்பட்ட வரிகள் உள்ளூராட்சி நிறுவனத்தின் வருமானமாக அன்றி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்த வேண்டிய நியதிச்சட்ட வருமானமாக இருந்ததுடன் அறவிடுகின்ற நிறுவனம் நியதிச்சட்ட வருமானமாக இருந்ததுடன் அறவிடுகின்ற நிறுவனம் சட்டரீதியான பொறுப்பாளராக மாத்திரம் இருந்த போதிலும் சபையினால் அறவிடப்பட்ட ரூபா 876,491 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 இன் 74 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அதிகாரச் சட்டத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் தலைவர், உப தலைவரை உள்ளடக்கிய ஆறு உறுப்பினர்களினால் 2012 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வெளிப்படுத்துகைகள் 2013 யூன் 28 ஆந் திகதி வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 எல்ஈ - 7478 ஆம் இலக்க கப் வாகனம்

பிரதேச சபையின் எல்ஈ - 7478 ஆம் இலக்க கப் வாகனம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரிடமிருந்து 2008 சனவரி 10 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் 2012 மார்ச் 06 ஆந் திகதி வரை சபையின் நடவடிக்கைகளுக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2008 சனவரி 10 ஆந் திகதி தொடக்கம் 2012 மார்ச் 06 ஆந் திகதி வரை 04 வருடங்களும் 02 மாதமும் ஆன காலத்தில் வாகனம் 161,450 கிலோமீற்றர் தூரம் ஓடியிருந்ததுடன் 5 வருடங்களுக்குக் குறைவான காலத்தில் அது செயற்பாடற்றுக் காணப்பட்டது. அது சபை வளவிற்கு அப்பாலுள்ள இடத்தில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் ஓடாமல் நிறுத்திவைக்கப்பட்ட காரணத்தினால் அது முழுமையாக துருப்பிடித்திருந்தமை 2013 யூன் 04 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இந்த வாகனத்திற்குரிய செயற்பாட்டுக் கைநூலின் பிரகாரம் 4000 கி.மீற்றர் தொடக்கம் 100,000 கிலோ மீற்றர் வரை 17 சந்தர்ப்பங்களில் சேர்விஸ் செய்தல் விற்பனை நிறுவனத்தின் மூலம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2008 யூன் 26 ஆந் திகதி 16,000 கி.மீற்றரில் சேவையாற்றியதன் பின்னர் சேர்விஸ் செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக 04 வருமான குறுகிய காலத்தின் போது ஓட முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. இந்த வாகனம் செயற்பாடற்றிருந்தமையை சபைச் செயலாளர் கேள்வி எழுப்பிய போதிலும் அது ஓடமுடியாதிருந்தமை சாரதியினாலோ அல்லது இயந்திரப் பொறியியலாளரின் நிலைமைப் பரிசோதனை சான்றிதழின் மூலமோ உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மாத்தறை மோட்டர் வாகன பரிசோதகரினால் வாகனத்திற்காக 2012 சனவரி 09 தொடக்கம் 2013 சனவரி 8 ஆந் திகதி வரையான காலத்திற்காக தகுதிச் சான்றிதழும் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(இ) இந்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக சபைக்கு நிதிரீதியான இயலுமை காணப்படாமையினால் தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் மற்றும் அதன் மதிப்பீட்டுப் பெறுமதி என்பவற்றைப் பெற்று கேள்வி கோருவதற்கு 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் அந்த அங்கீகாரம் 2013 யூன் 04 ஆந் திகதி வரையும் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) சபையின் தொழில்நுட்ப அல்லது கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி இந்த வாகனத்திற்காக 2009 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2011 நவம்பர் 07 ஆந் திகதி வரையான மூன்று வருட காலப்பகுதியில் ரூபா 232,930 தொகை

பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 178 தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.6 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர் /2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்